In the Court of the Magalir Neethimandram Fast Track Mahila Court, Thoothukudi

S.C.No.250/2022

Deposition of P.W.1

| | |
|---|---|
| Name | திரு.அழகர்சாமி |
| Father's Name/Husband's Name | திரு. |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Evidence Act Chapter X of 1872 on the 11th day of December 2024.

(1 வது எதிரி ஆஜர் செய்யப்பட்டார்.2 வது எதிரி ஆஜர்.3 வது எதிரி ஆஜர் இல்லை.3 வது எதிரியின் வருகையின்மையை மன்னிக்க பிரிவு 355 பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம், 2023 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை :**

நான் மருதன்வாழ்வு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் செல்போன் ரீசார்ஜ் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். எனக்கு மூன்று மகன்கள். என் மூன்று மகன்களும் வெளியூரில் வசித்து வருகின்றனர். என் மனைவி பெயர் மீனாட்சி. என் மனைவி மீனாட்சி உயிருடன் இருக்கும்போது இருதய அறுவைசிகிச்சை செய்து இதயத்தில் மிஷின் வைத்து வீட்டில் இருந்து வந்தார். 01.07.2022 ம் தேதி காலை 8 மணிக்கு நான் என் மனைவியிடம் சொல்லிவிட்டு சாவலப்பேரியில் உள்ள என்னுடைய செல்போன் ரீசார்ஜ் கடைக்கு சென்றேன். வியாபாரத்தை முடித்துவிட்டு சுமார் இரவு 8.30 மணிக்கு வீடு திரும்பினேன். வீட்டில்விளக்கு எரியவில்லை. நான் வராண்டா லைட்டை போட்டேன். வீட்டின் முன்பக்க கதவு பாதி திறந்தநிலையில் இருந்தது. வீட்டிற்குள்

சென்று பார்த்தேன். என் மனைவி மல்லாந்த நிலையில் பேச்சு மூச்சின்றி இறந்துகிடந்தார். நான் மீனாட்சி என்று கதறி கொண்டு என் மனைவியின் கையை தூக்கி பார்த்தேன். என் மனைவியின் கைகளில் அசைவு இல்லை. நான் உடனே என் அக்கா மகன் ராமசாமியை அலைபேசி மூலம் தொடர்புகொண்டு என்னுடைய வீட்டிற்கு வரும்படி கூறினேன். என்னுடைய அலறல் சத்தம்கேட்டு என் தம்பியும், மருமகளும் வந்தார்கள். அதன்பின்னர் நிறைய ஆட்கள் வந்தனர். பதட்டத்தில் இருந்தேன். யார் யார் வந்தனர் என்று என்னால் கணிக்க முடியவில்லை. நான் முதலில் என் மனைவி இயற்கையாக இறந்திருக்கவேண்டும் என்று நினைத்தேன். பெண்கள் அனைவரும் சேர்ந்து என் மனைவியின் பிரேதத்தை தூக்கி வைத்தார்கள். அவர்கள் பார்த்தபோது என் மனைவியின் முகத்தில் காயங்கள் இருப்பதாகவும், வாயிலும், உதட்டிலும் ரத்தம் வந்ததாக என் மனைவியின் பிரேதத்தை குளிப்பாட்டியவர்கள் சொன்னார்கள். காதிலும் காயம் இருப்பதாக சொன்னார்கள். என் மனைவி கழுத்தில் அணிந்திருந்த நகை இல்லை. காதில் அணிந்திருந்த கம்மல்கள் இல்லை. பீரோ உடைந்து கிடந்தது. அதன்பின்னர் தான் கொலை நடந்திருக்கவேண்டும் என்று தெரிந்து கொண்டேன். பீரோவில் வைத்திருந்த பணம் ரூ.2500/–ஐ காணவில்லை. என் பிள்ளைகள் மறுநாள் காலை வீட்டிற்கு வந்தார்கள். அதன்பின்னர் நான் மறுநாள் காலை நாரைகிணறு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் **அ.சா.ஆ.1**. போலீசார் மோப்பநாயுடன் வந்து என் வீட்டை பார்த்தார்கள். பின்னர் என் மனைவியை கொன்றவர்களை பிடித்துவிட்டதாக போலீசார் தகவல் கொடுத்தார்கள். நாரைகிணறு காவல்நிலையத்திற்கு வரும்படி நான்குநாள் கழித்து போலீசார் தகவல் சொன்னார்கள். போலீசார் செயினையும், கம்மல்களையும் அடையாளம்

காட்டும்படி சொன்னார்கள். நான் அவற்றை அடையாளம் காட்டினேன். கொலையாளிகள் மூன்று பேரை போலீசார் எனக்கு அடையாளம் காட்டினார்கள்.ஆஜரில் உள்ள இருவரும் மற்றும் இன்னொரு பெண்ணும் காவல் நிலையத்தில் இருந்தார்கள்(1,2 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி ஆஜர் இல்லை. அவரது வருகையின்மையை மன்னிக்க மனு தாக்கல் செய்யப்பட்டது) என் மனைவி அணிந்திருந்த நகை மட்டும் மீட்கப்பட்டது. பீரோவில் காணாமல் போன நகையை என் மனைவியை கொலை செய்தவர்கள் அதனை கடலில் தொலைத்துவிட்டதாக போலீசாரிடம் சொன்னதாக போலீசார் என்னிடம் சொன்னார்கள். மேலும் பீரோவில் காணாமல் போன ரூ.2500/–ல் ரூ.1000/–மட்டும் மீட்கப்பட்டதாக போலீசார் சொன்னார்கள். என் மனைவி கழுத்தில் அணிந்திருந்த நகை, கம்மல்கள் மற்றும் பணம் ரூ.1000/– ஆகியவற்றை கோவில்பட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக்கொண்டேன். என்னுடைய வறுமையின் காரணத்தால் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட நகை மற்றும் கம்மல்களை நான் விற்றுவிட்டேன். மேலும் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணம் ரூ.1000/–த்தையும் செலவழித்துவிட்டேன். அதற்கு நீதிமன்றத்தில் அனுமதி பெறவேண்டும் என்பது எனக்கு தெரியாது. என்னை மன்னித்துக் கொள்ளவேண்டும். நீதிமன்றத்தில் இருந்து நகை மற்றும் கம்மல்களை பெறும்போது அவை புகைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகை மற்றும் கம்மல்கள் நான் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக் கொண்டவையாகும். அந்த புகைப்படங்கள் **அ.சா.ஆ.2**. என்னிடம் ஒப்படைக்கப்பட்ட ரூ.1000/–த்திற்கான புகைப்படங்கள் **அ.சா.ஆ.3**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 ,3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

எதிரிகள் மூவரும் என்னுடைய ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 1 மற்றும் 3 எதிரிகளின் வீடுகள் என்னுடைய வீட்டின் அருகில் பார்க்கும் துாரத்தில் உள்ளது. 1, 3 எதிரிகளின் வீட்டிற்கு மோப்பநாய் சென்றதா என்று எனக்கு தெரியாது. என்னுடைய அலறல் சத்தம் கேட்ட பதினைந்து நிமிடங்களில் உறவினர்களும், அருகில் உள்ளவர்களும் என் வீட்டிற்கு வந்தார்கள். அவர்கள் வந்த அரைமணிநேரத்தில் என் மனைவியை குளிப்பாட்டினார்கள். என் மனைவியின் பிரேதத்தை வைக்க குளிர்சாதனபெட்டி என் வீட்டிற்கு வந்தது. அதனை யார் வரவழைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. அன்றைய தினம் இரவு நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. போலீசார் என்னுடைய வீட்டிற்கு வந்து பார்வையிட்டார்கள். அவர்களுக்கு யார் தகவல் தந்தது என்று எனக்கு தெரியாது. அதன்பின்னர் மறுநாள் காலை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் சொன்னதன் பேரில் ஒரு நபர் புகார் எழுதினார். அவர் யார்என்று எனக்கு ஞாபகமில்லை. புகாரை எங்கு வைத்து யார் மூலம் எழுதினேன் என்று ஞாபகமில்லை. புகாரில் என் மனைவிக்கு இருந்ததாக சொல்லும் காயங்கள் குறித்து நான் சொல்லவில்லை என்றால் சரிதான். 1, 3 எதிரிகளின் குடும்பத்தாருடன் ஊரில் உள்ளவர்கள் யாரும் பேசமாட்டார்கள் என்று சொன்னால் சரிதான். நான் நீதிமன்றத்தில் பெற்ற இரு கம்மல்களில் ஒரு கம்மலில் திருகை கிடையாது என்றால் சரிதான். காணாமல்போன நகைகளில் ஒன்றரை பவுன் நகை எனக்கு திரும்ப ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று என் வீட்டில் எந்த பொருளும் காணாமல் போகவில்லை என்று சொன்னால் தவறு. என் மனைவிக்கு காயங்கள்

இருந்ததாக நான் சொல்வது உண்மையல்ல என்று சொன்னால் தவறு. என் மனைவி இயற்கையாக மரணமடைந்துவிட்டார் என்று சொன்னால் தவறு. எதிரிகளுக்கும், இந்தவழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் தவறு.

**2 வது எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

( 1 மற்றும் 3 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையை 2 வது எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு மேற்படி குறிப்பாணை பதிவு செய்யப்பட்டது)

**மறுவிசாரணை :**இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அளித்த சாட்சியம் அவர் கூறிய அதே வார்த்தைகளால் என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் எதிரிகள் / எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி **கையொப்பம்** செய்துள்ளார்.

MADHAVA RAMANUJAM S
Digitally signed by MADHAVA RAMANUJAM S
Date: 2024.12.11 17:33:22 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
தூத்துக்குடி.

தட்டச்சு செய்தவர் – சு.கோமதி.